Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 11 | (27 - 09 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 222

## பாடசாலை அபிவிருத்தி சபையை மாத முடிவிற்குள் அமைக்குக

அனைத்துப் பாடசாலைகளிலும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைக்கும்படி வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்று தெரிவிக்கின்றது, பாடசாலை அபிவிருத்திச் சபையின் பெயரில் வங்கிக் கணக்கொன்றைத் திறக்கும்படியும், அந்தக் கணக்கில் ஜனாதிபதியினால் வழங்கப்படும் 1000 ரூபா வைப்பில் இடப்படும் எனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை முன்னாள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தில் கணக்கிலுள்ள பணத்தையும் புதியகணக்கிற்கு மாற்றுமாறும் அந்தச் சுற்று நிருபம் கூறுகின்றது

# கடற்படை பீரங்கி புலிகளால் அழிப்பு

# 4 படையினர் பலி: பலர் படுகாயம்

### விமான நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் விமானங்களின் நடமாட்டம் நேற்று யாழ். குடாநாட்டில் அதிகரித்துக் காணப்பட்டது

நேற்றுக்காலைபூநகரிப்பகுதியிலிருந்து வந்த 2 குண்டுவீச்சு விமானங்கள் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை நோட்டமிட்டு பலாலி விமான நிலையத்தில் சென்று இறங்கியதை காணக்கூடியதாக இருந்தது. இதற்கிடையே உலங்குவானூ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் மற்றொரு துணிகர தாக்குதல்

[நமது நிருபர்]

பூநகரி இராணுவ முகாமின் காவலரண்கள் மீது மீண்டும் ஒரு தாக்குதலை விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்தினர். இருபத்திஐந்து மணி நேரத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும். இந்த அதிரடித் தாககுதலின்போது குறைந்தது நான்கு படையினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயம் அடைந்தனர்.

இத்தாக்குதலில் பல ஆயுதங்களையும் இராணுவ உபகரணங்களையும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் கடற்படைக்குச் சொந்தமான 8 கி. மீற்றர் தூரம் சுடவல்ல இரு சுடு குழல் கொண்ட நவீன கனரகத் துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றி அழித்தனர். இத் துணி கர அதிரடித் தாக்குதலில் இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 1.30மணி அளவில் இந்த அதிரடித்தாக்குதல் நடத்தப்பட்டது. சங்குப்பிட்டித்துறையை நோக்கி ஆலடிப்பகுதியிலிருந்தஇராணுவத்தினரின் மிகப் பலமான காவலரண்களே விடுதலைப் புலிகளின் இரண்டாம் நாள் அதிரடித் தாககுதலுக்கு இலக்கானது இத்தாக்குதலில்நான்கிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட அதேவேளை காயமடைந்த பலர் ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலின்போது சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான எட்டு கிலோ மீற்றர் தூரம்வரை செலலக் கூடியதான 14 5 MMZPU-2 ரக இரு சுடுகுழல் கொண்ட நவீனகனரகத் துப்பாக்கியைப் புலிகள்கைப்பற்றிஅழித்தனர் அத்துடன், வேறு ஆயுதங்களைக் கைப்பற்றிவந்தனர்.


இதேவேளை பூநகரிப் பகுதியில் கடந்த 36 மணித்தியாலங்களாக இடம்பெற்றுவரும் மோதல்களில் இராணுவத்தினரின் முன்னணி நிலைகளைச் சிதைப்பதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டிருப்பதாகவும், இதற்காக சங்குப்பிட்டிப்பகுதியில் கடற்புலிகள் சுழியோடிகளைப் பயன்படுத்தியதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரூபவாகினி அறிவித்தது.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | | |
|---|---|---|
| ★ ஆர். பி. ஜி. | — | 01 |
| ★ அதற்குரிய ஷெல் | — | 05 |
| ★ ஆர். பி. ஜி. புரொப்ளர் | — | 05 |
| ★ 203 பிஸ்ரல் | — | 01 |
| ★ 203 ஷெல் | — | 25 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 56 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 81 - 1 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 56 மகசின் | — | 10 |
| ★ ரி - 81 மகசின் | — | 03 |
| ★ ஜி 3 மகசின் | — | 06 |
| ★ ஜே. ஆர். கிறனைட் | — | 32 |
| ★ பராலைற் | — | 10 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 6394 |
| ★ ரேடோ ரவைகள் | — | 79 |
| ★ 14. 5 ரவைகள் | — | 2689 |
| ★ 14. 5 லிங் | — | 703 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 03 |

### கிழக்கில் 2படை பலி

மட்டக்களப்பில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த சண்டையில்



பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் வீரச்சாவு அடைந்த லெப். கேணல் சுபன், லெப். தமிழேஸ்வரன், 2ஆம் லெப். சுருளி ஆகியோரின் புகழுடல்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# பூநகரியில் ராணுவத் தளபதிகள் மயிரிழையில் உயிர்தப்பினர்

அளவில் இந்த அதிரடித்தாக் குதல் நடத்தப்பட்டது. சங் ஆலடிப்பகுதியில் நிந்த இராணு வத்தினரின் மிகப் பலமான

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | | |
|---|---|---|
| ★ ஆர். பி. ஜி. | — | 01 |
| ★ அதற்குரிய ஷெல் | — | 05 |
| ★ ஆர். பி. ஜி. புரொப்ளர் | — | 05 |
| ★ 203 பிஸ்ரல் | — | 01 |
| ★ 203 ஷெல் | — | 25 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 56 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 81 - 1 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 56 மகசின் | — | 10 |
| ★ ரி - 81 மகசின் | — | 03 |
| ★ ஜி 3 மகசின் | — | 06 |
| ★ ஜே. ஆர். கிறனைட் | — | 32 |
| ★ பராலைற் | — | 10 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 6394 |
| ★ நேட்டோ ரவைகள் | — | 79 |
| ★ 14. 5 ரவைகள் | — | 2689 |
| ★ 14. 5 லிங் | — | 703 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 03 |
| ★ தலைக்கவசம் | — | 02 |
| ★ தண்ணீர் கான் | — | 01 |
| ★ மழைக் கவச அங்கி | — | 01 |
| ★ கடற்படைத் தொப்பி | — | 02 |
| ★ சிவில் சப்பாத்து (சோடி) | — | 02 |

அதிரடித் தாககுதலுக்கு இலக் கானது இத்தாக்குதலில்நான் கிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட அதேவேளை காயமடைந்த பலர் ஓடிவிட்ட னர்.

இத்தாக்குதலின்போது சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான எட்டு கிலோ மீற்றர் தூரம்வரை செலக் கூடியதான 14 5 MMZPU-2 ரக இரு சுடுகுழல் கொண்ட நவீனகனரகத் துப்பாக்கியைப் களைக் கைப்பற்றிவந்தனர்

இதேவேளை பூநகரிப் பகுதி யில் கடந்த 36 மணித்தியாலங் களாக இடம்பெற்றுவரும் மோதல்களில் இராணுவத்தின ரின் முன்னணி நிலைகளைச் சிதைப்பதில் விடுதலைப்புலி கள் ஈடுபட்டிருப்பதாகவும், இதற்காக சங்குப்பிட்டிப்பகுதி யில் கடற்புலிகள் சுழியோடி களைப் பயன்படுத்தியதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டா ரங்களை மேற்கோள்காட்டி ரூபவாகினி அறிவித்தது.



பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் வீரச்சாவு அடைந்த லெப். கேணல் சுபன், லெப். தமிழேஸ்வரன், 2ஆம் லெப். சுருளி ஆகியோரின் புகழுடல்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## கிழக்கில் 2படை பலி

மட்டக்களப்பில் புலிகளுக் கும் இராணுவத்தினருக்கும் இடையில் நட்ந்த சண்டையில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர் என சிறி லங்கா பாதுகாப்பு வட்டாரங் களை மேற்கோள் காட்டி இந் திய வானொலி அறிவித்தது.

# பூநகரியில் ராணுவத் தளபதிகள் மயிரிழையில் உயிர்தப்பினர்

இராணுவத் தளபதி லெப். ஜெனரல சிசில் வைத்தியரட் ணாவும், வடபகுதித் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவும் நேறறு முந்தினம் மயிரிழையில் உயிர்தபபினார் கள்.

பூநகரியில் சண்டையின் போது நேற்று முன்தினம் பிற் பகலில் இவர்கள் நின்றுகொண் டிருந்த இடத்திலிருந்து சிறு தூரத்தில் இராணுவ டிரக் வாகனம் ஒன்று கணணி வெடி யில் சிக்கிச் சிதறிய போதே இருவரும் மயிரிளையில் தப்பி னார்கள் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிககின் றன.

மேலும் கண்ணிவெடியில் சிக்கிய இராணுவ வாகனத் தில் பயணம் செய்த ஒரு இரா

### கண்ணிவெடியில் சிக்கி அதிகாரி உட்பட 8 படை பலி

ணுவ கப்டன் உட்பட எட்டு இராணுவத்தினர் பலியாகிய தாகவும பத்துப்பேர் படுகாயம் அடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிறிலங்கா வானொலி அறிவித்தது

இதேவேளை விடுதலைப் புலிகள் பூநகரி முகாம் மீது தாக்குதலை நடாததிவிட்டுத் திரும்பும் போது பெருமளவு ஆயுதங்களையும் அங்கிருந்து எடுத்துச் சென்றுவிட்டதாக இராணுவ வட்டாரங்கள் மேலும தெரிவிக்கின்றன.

# திலீபனின் நினைவு நாளில் மக்கள் உணர்ச்சி பொங்க எழுச்சிமயம்

(நமது நிருபர்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் உண்ணா நோன்பிருந்து தமிழீழ விடு தலைக்காக தன்னைத்தானே தற்கொடையாக்கிக்கொண்ட நாளான நேற்றைய தினத்தை மக்கள் அமைதியான முறை யிலும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சியுடனும் அனுஷ்டித்த னர்அரச நிறுவனங்கள், வங்கி கள் முதல் நடைபாதை வியா பாரங்கள், பெட்டிக் கடை கள் அனைத்தும் மூடப்பட்டி ருந்தன சந்தைகள் எவை யுமே கூடவில்லை.

வீதிகளின் இருமருங்கிலும் பொதுமக்களின் வீட்டுவாயில் கள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள் அனைத்தும் புனிதப்படுத்தப் பட்டு அழகுற அலங்கரிக்கப் பட்டு அதில் தியாகி திலீபனின் உருவப்படத்தை வைத்து மக் கள் மலரஞ்சலி செலுத்தினர். உருவப்படததின் முன் அணை யாத் தீபம் ஏற்றப்பட்டு அது ஒளி விட்டுக்கொண்டிருந்தது.

வீதிகள் தோறுமுள்ள வர்த் தக நிலையங்கள, பாட சாலைகள், அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்க ளின் கட்டடங்களில மஞ்சள் சிவப்பு நிற கொடிகள் பறக் கவிடப்பட்டிருந்தன. வீதிகள் தோரணங்களாலும் மஞ்சள் சிவப்பு நிற கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### செப்டெம்பரில் 91 இராணுவம பலி

செப்டெம்பர் மாதத்தில் மட்டும புலிகளின் தாக்குத லுக்கு 91 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் படுகாயமடைந்தனர் எனவும் சிறிலங்கா இராணு வத் தரப்பு தெரிவித்துள்ளது.


### பூநகரிப் பகுதியில் தொடர்ந்து குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

பள்ளிக்குடாவில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலைத் தொடர்ந்து மேற்படி முகாம் சுற்றாடல்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர் நேற்றும் இரண்டாவது நாளாக அகோர குண்டு வீச்சுத் தாக் குதல்களை நடாததி வருகின் றனர்

கறுக்காய்த்தீவு, வள்ளி முனை, செல்லையா தீவு, மட்டுவில் நாடு, நல்லூர், சாமிப்பிலவு, நச்சிக்குடா ஆகிய பகுதிகள் மீதே மேற் படி விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றது. நேற்று முன் தினம் அதிகாலை ஆரம்பித்த தாக்குதல்கள் நேறறு முன் தினமும், நேற்று முழுநாளும் தொடர்ச்சியாக நடைபெற் றன விமானப்படையினரது குண்டு வீச்சு விமானங்கள், அவ்ரோ விமானங்கள் உலங் குவானூர்திகள் ஆகியவை இணைந்து இத்தாக்குதல்

( 4 ஆம் பக்கம் பார்க்க )



தியாகி லெப். கேணல் திலீபன் தியாக மரணமடைந்த ஐந்தாவது ஆண்டு நினைவுநாளான நேற்று அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் நடை பெற்ற உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களின் ஒரு பகுதியினர்.

# கோட்ட ரீதியாக இடம்பெற்ற மாபெரும் எழுச்சி நிகழ்வுகள்

[நமது நிருபர்]

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபனின் 5ஆம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்வுகள் தமி ழீழ மெங்கும் மிகவும் உண ர்வு பூர்வமாக நடைபெற் றது. கோட்ட ரீதியாக நடை பெற்ற இந்நிகழ்வுகளில் பல் லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

வலிகாமம் கோட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவி லடியிலும் தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மனங்குணாய பிள்ளையார் ஆலய முன்றலிலும் வடமரா ட்சிக் கோட்டத்தில் மாலிச் சந்தியிலும் உண்ணா விரத நிகழ்வும் பொதுக்கூட்டங் களும் இடம் பெற்றன.

யாழ் மாவட்டததில் வலி காமம், வடமராட்சி, தென் மராட்சி கோட்டங்களில் பல் லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள ஈகச் சுட ரேற்றலுடன் திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகள் உண ர்வு பூர்வமாக ஆரம்பமாகின.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 7-00 மணி க்கு தியாகி திலீபனின் தந் தையார் திரு. இராசையா அவர்கள் ஈகச்சுடரேற்றி வைத்தார்.

அதனை தொடர்ந்து தமி ழீழ தேசியக் கொடி உண்ணா விரத பந்தல்களின் அருகே ஏற்றி வைக்கப்பட்டது. அத னைத்தொடர்ந்துபாடசாலை மாணவர்களின் பான்ட் வாத் திய இசை இடம் பெற்றது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப் பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி இரவு வேளை கட்டுவன் சிறி லங்கா இராணுவம் துப்பாக் கிப் பிரயோகத்தை மேற் கொண்டு வருகிறது.

நேற்று இரவு 8.00 மணி யளவில மேறகொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தினால் இராசேந்திரம் தயாபரன் வயது (17) என்பவர் காய மடைந்தார். (ச, க)

# இந்திய ராணுவத்தை இலங்கைக்குள் அனுமதித்தது மிகப் பெரும் தவறு

**- சந்திரிகா குமாரணதுங்க**

(டில்லி)

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு ஏர அனுமதித்தது மிகப் பெரிய தவறாகும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சந்திரிகா குமாரணதுங்க டில்லியில் 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஐம்பதினாயிரத்திற்கு உட்பட்ட படையினரே இலங்கையில் உள்ளனர் என ஒப்பந்தத்தை செய்தவர்கள் கூறிய போதும் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் இலங்கையில் தங்கியிருந்தனர்.

இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால் முழு இலங்கையும் கைப்பற்றப் பட்டுவிடலாம் என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டது. இப்படி ஒரு போதும் நடைபெறாது என முன்னர் கருதியவர்கள் கூட பெரிய எண்ணிக்கையில் இந்தியப்படையினர் இங்கு அனுப்பப்பட்டதனால் சில வேளை இந்தியா இலங்கையைக் கைப்பற்றி விடலாம் என அச்சம் தெரிவித்தனர்.

அதேசமயம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகள் இந்தியாவிற்கு எதிரானதாக அமையக்கூடாது

ஆரம்பத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரித்தது. ஆனால் இந்திய அமைதிப் படையின் வருகையின் பின்னர் எதிர்க்கவேண்டி ஏற்பட்டது.

அதேசமயம் தமிழ் மக்களுக்கு கூடுதலாக உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனவும் பேட்டியின் போது அவர் தெரிவித்தார்.

வடபகுதியில்

## மரணங்கள் தொடர மருந்தின்மையே காரணம்

**– நவசமசமாஜக்கட்சி**

போதிய மருந்து வகைகள் இல்லாததினால், யாழ்ப்பாணத்தில் தடுக்கக்கூடிய மரணங்கள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன என நவசமசமாஜக்கட்சியின் பிரதிநிதி யொருவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் மகளிர் விவகார சுகாதார அமைச்சருக்கு அவர் அனுப்பி வைத்த கடிதமொன்றிலேயே மேற்படி விடயம் உள்ளது.

மேலும் தமிழ்ப் பகுதிகளில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளினால் பெருமளவு பொதுமக்கள் காயமடைகின்றனர் ஆனால் காயங்களுக்குக் கட்டுப் போடுவதற்கான துணிவகைகள் கூட யாழ்ப்பாணத்தில் கிடைப்பதாக வில்லை.

இவ்விடயம் தொடர்பாக யூலை மாதம் 9-ம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் பிரஸ்தாபிக்கப்பட்டது அப்பொழுது. உயிர்காக்கும் முக்கிய மருந்துப் பொருள்கள் போதியளவு அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

ஆகஸ்ட் 11-ம் திகதியன்று யாழ்ப்பாண அரசு அதிபரிடம் இருந்து வந்த அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் நிலவும் மருந்துப்பொருள் தட்டுப்பாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது கடந்த மூன்று மாதங்களாக யாழ்ப்பாணத்திற்கு ஒழுங்கான மருந்து விநியோகம் எதுவும் செய்யப்படவில்லை.

யாழ் அரச அதிபரால் கடந்த ஆகஸ்ட் மாதம் அனுப்பி வைககப்பட்ட அறிக்கையில், போதுமான மருந்துப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க சாத்தியமான அளவு விரைவாக நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாயும் நவ சம சமாஜக் கட்சியின் பிரதிநிதிஅக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பயிர்ச்செய்கை திட்டமிடல் கலந்துரைபாடல்

(யாழ்ப்பாணம்)

வடதமிழீழத்திற்கான 92, 93 ஆம் ஆண்டுகளுக்கானகால போக பயிர்செய்கைத் திட்டமிடலை மேற்கொள்ளவும், அவற்றிற்கான உள்ளீடுகள் கிடைப்பதை உறுதி செய்வதற்குமான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் இன்று காலை 8-30 மணிக்கு கிளிநொச்சி விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் மங்கள விளக்கை விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்டத் தளபதி தீபன், கிளிநொச்சி அரச அதிபர் திரு பொன்னம்பலம் ஆகியோர் ஏற்ற, வரவேற்பு உரையை மேற்படி அமைப்பின் கிளிநொச்சிக் கோட்டப் பொறுப்பாளர் நிகழ்த்துவார். சிறப்புரையை வன்னிமாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைகளை யாழ்- செயலக திட்டப் பணிப்பாளர் செ பத்மநாதன் கிளிநொச்சி ஒக்ஸ்பாம் சார்பில் ச த. பத்மநாதன் திருநெல்வேலி விவசாயஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் எஸ். ஜெயபதி, க. விஜயரத்தினம் பாலசுப்பிரமணியம் நல்லூர் கமநல சேவை நிலையத்தின் சார்பில் நா. குழந்தைவேல் ஆகியோர் நிகழ்த்துவர். இறுதியாக நன்றியுரையை மேற்படி கழக மன்னார் மாவட்ட பொறுப்பாளர் கலைமான் நிகழ்த்துவார்.

## ஒருநாள் உண்ணா விரதம்

(குருநகர்)

லெப் கேணல் தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவைமுன்னிட்டு றெக்கிளமேசன் கழக இளைஞர் சனசமூக நிலைய ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதத்தை குருநகர் கடற்புலி பிரதேசப் பொறுப்பாளர்சிவலிங்கம்அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி உண்ணா நோன்பைஆரம்பித்து வைத்தார். இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

## குழாய்க்கிணறு அமைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தில் தனபாலசிங்கம் குடும்பத்தினர் முயற்சியால் குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது இதனால் இவ் ஆலயத்தில் நீண்ட காலமாக இருந்துவந்த தண்ணீர்க் குறைபாடு நீங்கியுள்ளது.

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் 28, 29-09-1992 ஆகிய திகதிகளில் கல்விக்கண்காட்சிஒன்று நடைபெறவுள்ளது

சிறப்பு விருந்தினராக உதவி கல்விப்பணிப்பாளர் எஸ். சுப்பிரமணியம் கலந்து கொள்ளுகிறார். (42)

இந்தியாவிலிருந்து அகதிகள்

## வருகையை தாமதப்படுத்த சிறிலங்கா அரசு திட்டம்

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலை வரும் அகதிகளை தங்க வைப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உப்புவெளி நலன்புரி முகாமில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. லவ்லேன் பகுதியில் முன்னர் உணவுக் களஞ்சியமாக பயன்படுத்தப்பட்ட கட்டடத்திலும் அகதிகளை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்,

இடநெருக்கடியை தவிர்க்கும் வகையில் அகதிகளின் வருகையை காலதாமதப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆசியாவில் தற்கொலை வீதம்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

OLIVETTI TYPE WRITER நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (3208)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5070)

### உடன் விற்பனைக்கு உண்டு

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிப்பாய். (3272)

### கோழித்தீன் வெற்றுப்பைகள்

கோழித்தீன் வெற்றுப் பைகள் தேவை. தொடர்பு -மில்க்வைற். (சி/5104)

### வியாழ மாற்றம்

மீன, இடப, சிங்க, விருச்சிக, மகர, ராசியினருக்கு யோகம் மேட, மிதுன, கடக, கன்னி, துலா, தனு, கும்ப ராசிக்காரர்களுக்கு பரிகாரம். உங்கள் பலனறிய V A சிவராசா சோதிடர் (வேலணை) 152 B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (3280)


அக். 26. பௌதிகவியல் பரீட்சை

## பழைய சுட்டிலக்கத்தில் மாணவர் தோற்றலாம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர பௌதிகவியல் II க்கான மீள் பரீட்சை அக்டோபர் 26 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரியவருகிறது.

பரீட்சார்த்திகளுக்கு புதிய அனுமதி அட்டை வழங்கப்படும். கடந்த ஆகஸ்டில் வழங்கப்பட்ட அதே சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றலாம். புதிய பரீட்சை அக்டோபர் 24 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது இப்பரீட்சை அக்டோபர் 26 ஆம் திகதியே நடைபெறவுள்ளது.

இதேவேளை ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் பௌதிகவியல் பகுதி II வினாத்தாள்கள் வெளியானது தொடர்பாகத் தேடப்பட்டு வந்தவர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இத்தகவலின் உண்மைத் தன்மை குறித்துத் தாம் புலன் விசாரணை மேற்கொண்டு வருவதாகத் துப்பறியும் பொலிஸ்பிரிவு அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரிண்டென் சந்திரா ஜெயவர்த்தனா கூறினார்.

விசாரணை தொடர்பான அறிக்கை விரைவில் கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் கூறினார். மேலதிக விபரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

1992 க பொ த. (உயர்தரம்) பரீட்சை பௌதிகவியல் பகுதி II வினாத்தாள் சில பரீட்சை நிலையங்களில் வெளியானதாலும் பொதுப் பரீட்சையின் நம்பகத்தன்மை கெட்டு விட்டதாகப் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்தே புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்த

## திருமலை மக்கள் திலீபனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவை ஒட்டித் திருமலை மாவட்ட இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள மானிப்பாய் வீடமைப்புத் திட்டம், அரியாலை செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டம் கைதடி சரா வீடமைப்புத் திட்டம், மட்டுவில் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டம், நாகர்கோயில், ஜோய்வீடமைப்புத் திட்டம் செம்பியன்பற்று டேவிட்வீடமைப்புத் திட்டம், முஸ்லிம் பகுதி, நவாலி ப.ரமதேவா வீடமைப்புத் திட்டம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ்மக்களால் உண்ணா விரதமும் அஞ்சலிக் கூட்டமும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மக்களால் சுழற்சி முறையில் 15-9-92-ம் திகதி முதல் 22-9-92-ம் திகதி வரை தினமும் காலை 7 00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

## கொடிகாமத்தில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் கொடிகாமம் பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையும் நாவற்காடு பகுதியில் உள்ள குளம் ஒன்றரையடி ஆழமாக்கப்பட்டு குளக்கட்டுகளும் சீர்செய்யப் பட்டது.

17ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து ஆலடி பிள்ளையார் கோவில் வரை ஒன்றரை மைல் நீள மான வீதியின் இருமருங்கி டப்பட்டு வீதி செப்பனிடப் பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் கிராமிய உற்பத்திக்குழுவினரும் அப்பிரதேச மக்களும் இணைந்து இச்சிரமதானததினை வெகு சிறப்பாக செய்து முடித்துள்ளனர்.

## மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 30-09-1992 அன்று காலை 10 மணியளவில் மனையியல் வாழ்க்கைத்திறன் கல்விக்கான கண்காட்சி நடைபெறவுள்


யாழ்\ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவதேவஸ்தான

நவராத்திரி விழா - 1992

கும்ப ராசிக்காரர்களுக்கு பரிதாபம். உங்கள் பலனறிய V A சிவராசா சோதிடர் (வேலணை) 152 B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (3280)

பொறுப்பாளர்சிவலிங்கம்அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி உண்ணாநோன்பைஆரம்பித்து வைத்தார். இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து அகதிகள்

## வருகையை தாமதப்படுத்த சிறிலங்கா அரசு திட்டம்

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலை வரும் அகதிகளை தங்க வைப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உப்புவெளி நலன்புரி முகாமில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. லவ்லேன் பகுதியில் முன்னர் உணவுக் களஞ்சியமாக பயன்படுத்தப்பட்ட கட்டடத்திலும் அகதிகளை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்,

இடநெருக்கடியை தவிர்க்கும் வகையில் அகதிகளின் வருகையை காலதாமதப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆசியாவில்தற்கொலைவீதம் சிறிலங்காவில்தான் அதிகம்

(கொழும்பு)

ஆசியாவிலேயே சிறிலங்காவில் தான் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த ஆண்டில் மட்டும் 5772 ஆண்களும், 1339 பெண்களும் தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

15 வயது முதல் 45வயது வரை உள்ளவர்கள் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனத் தெரிய வருகிறது மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள மாவட்டங்களில் தற்கொலை எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பெண்களைவிட ஆண்களே அதிகம் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்று மற்றொரு தரவு கூறுகின்றது.

## ஏனைய சிறைக் கைதிகள் விபரம் பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

புத்தளம், அநுராதபுரம், மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தொடர்பான விபரங்களையும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலைகள் ஆணையாளருடன் யாழ்- அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்படி விடயம் குறித்து பேசவுள்ளார்.

மேற்படி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் பெயர் விபரங்களையும் இவர்கள் தொடர்பான ஏனைய தகவல்களையும் தரும்படி யாழ்- அரச அதிபர் சிறைச்சாலை ஆணையாளரிடம் கோர இருக்கிறார்.

(க),(பா)

---


மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம்

வரைவுள்ளது

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 14-6-92இல் நடைபெற இருந்து பிற்போடப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 04 - 10 - 92 ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சி நிரலில் முக்கிய விடயங்களுடன் வைத்தியசாலையை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் பொறுப்பேற்பதும் சம்பந்தமான விடயமும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

ச. குலசூரியன் — உபதலைவர்

நா. வேலுப்பிள்ளை — செயலாளர்

20-9-92 (சி-5121)


---

...பர் திரு பொன்னம்பலம் ஆகியோர் ஏற்ற. வரவேற்பு உரையை மேற்படி அமைப்பின் கிளிநொச்சிக் கோட்டப் பொறுப்பாளர் நிகழ்த்துவார். சிறப்புரையை வன்னிமாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைகளை யாழ்- செயலக திட்டப் பணிப்பாளர் செ பத்மநாதன் கிளிநொச்சி ஒக்ஸ்பாம் சார்பில் ச த. பத்மநாதன் திருநெல்வேலி விவசாயஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் எஸ். ஜெயபதி, க. விஜயரத்தினம் பாலசுப்பிரமணியம் நல்லூர் கமநல சேவை நிலையத்தின்

இதனால் இவ் ஆலயத்தில் நீண்ட காலமாக இருந்துவந்த தண்ணீர்க் குறைபாடு நீங்கியுள்ளது.

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் 28, 29-09-1992 ஆகிய திகதிகளில் கல்விக்கண்காட்சிஒன்று நடைபெறவுள்ளது

சிறப்பு விருந்தினராக உதவி கல்விப்பணிப்பாளர் எஸ். சுப்பிரமணியம் கலந்து கொள்ளுகிறார். (42)

துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது கடந்த மூன்று மாதங்களாக யாழ்ப்பாணத்திற்கு ஒழுங்கான மருந்து விநியோகம் எதுவும் செய்யப்படவில்லை.

யாழ் அரச அதிபரால் கடந்த ஆகஸ்ட் மாதம் அனுப்பி வைககப்பட்ட அறிக்கையில், போதுமான மருந்துப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க சாத்தியமான அளவு விரைவாக நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாயும் நவ சம சமாஜக் கட்சியின் பிரதிநிதிஅக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜோய்வீடமைப்புத் திட்டம் செம்பியன்பற்று டேவிட்வீடமைப்புத் திட்டம், முஸ்லிம்

மணி வரை உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

## கொடிகாமத்தில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் கொடிகாமம் பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையும் நாவற்காடு பகுதியில் உள்ள குளம் ஒன்றரையடி ஆழமாக்கப்பட்டு குளக்கட்டுகளும் சீர்செய்யப் பட்டது.

17ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து ஆலடி பிள்ளையார் கோவில் வரை ஒன்றரை மைல் நீளமான வீதியின் இருமருங்கிலும் இருந்த பற்றைகள் வெட்டப்பட்டு வீதி செப்பனிடப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் கிராமிய உற்பத்திக்குழுவினரும் அப்பிரதேச மக்களும் இணைந்து இச்சிரமதானத்தினை வெகு சிறப்பாக செய்து முடித்துள்ளனர்.

## மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 30-09-1992 அன்று காலை 10 மணியளவில் மனையியல் வாழ்க்கைத்திறன் கல்விக்கான கண்காட்சி நடைபெறவுள்ளது. (42)

---


யாழ்\ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவதேவஸ்தான

# நவராத்திரி விழா - 1992

தினமும் மாலை 5.00 மணிக்கு அபிஷேகமும் சொற்பொழிவுகளும் தொடர்ந்து நவராத்திரி பூசைகளும் நடைபெறும்.

## சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள்:-

(நேரம்:- 6.00 மணிதொடக்கம் 7-00 மணி வரை)

| திகதி | பெயர்கள் | பொருள் |
|---|---|---|
| 1) 27-09-1992 | திரு. சிவமகாலிங்கம் | பக்தி வைராக்கியம் |
| 2) 28-09-1992 | கவிஞர் க யோகராசா | சிவசக்தியின் திருவிளையாடல்கள் |
| 3) 29-09-1992 | திரு எம். பி. அருளானந்தம் | தாயே தயாபரி |
| 4) 30-09-1992 | கலாநிதி கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை | இந்து மதத்தில் தாய்த் தெய்வ வழிபாடு |
| 5) 01-10-1992 | திரு. ஆ. திருமுருகன் | சக்தி தத்துவம் |
| 6) 02-10-1992 | பண்டிதர் மூ சு.வேலாயுதபிள்ளை | அம்மன் அருள் |
| 7) 03-10-1992 | திரு. த சிவகுமாரன் | பண்கண்டளவில் பணிசெய்வார் |
| 8) 04-10-1992 | திரு தி திருநந்தகுமார் | அம்பிகையைச் சரணடைந்தால் |
| 9) 05-10-1992 | மானம்பூ உற்சவம் | |

– நிர்வாக சபை

(சி-5116)


---


# ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

ஆண்டு 5 முதல் 11 வரை மேலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால்

★ கணிதம் ★ விஞ்ஞானம்

★ சமூகக்கல்வி ★ தமிழ்

★ ஆங்கிலம் ★ வர்த்தகம்

ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு போதிய கல்வித்தகைமைகள் அனுபவம் திறமை உள்ளவர்கள் எதிர்வரும் 28 ஆம், 30 ஆம், 02 ஆம் திகதிகளில் பி. ப. 4 - 5 வரை தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

- இயக்குநர்

ESTD:-1973 REGD.-No J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

(சி / 5109)


---


# நினைவு கூருகின்றோம்...

# 1992 - 09 - 27

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில வீரச்சாவெய்திய -

★ ராஜன் / ஜெயம் [நாகராசா ஜெயராசா - தம்பலகமம்]

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் கணேசபுரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

மோகன் (சோமசுந்தரம் விமலதாஸ் - தவசியூர், ஓமந்தை, வவுனியா)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

அருள் (வேலுப்பிள்ளை சிவகுமாரன் - மருதோடை, நெடுங்கேணி, மணலாறு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேபபவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - குறிஞ்சாமுனைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

யாழ்ப்பாணத்தில் ‘உதயன்’ நாளிதழ் காரியாலயத்தின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட காரியாலய ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் எமைப் பிரிந்த -

சாள்ஸ் (மகாத்மராசா - தாண்டவன்வெளி, மட்டக்களப்பு)

இதே ஆண்டு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

ஈசன் (சிதம்பரப்பிள்ளை அசோக்குமார் - 155-ம் கட்டை, கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5120)

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உன்னுடைய நண்பனுக்கு ஆலோசனை கூறும் போது, அவன் நன்மையை நாடு; அவனைத் திருப்திசெய்ய வேண்டுமென்று எண்ணாதே.

— ஸோலொன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிங்கள மக்கள் அல்ல தடைக்கற்கள்

"சமஷ்டி அரசமைப்பு முறையை ஒவ்வொரு சிங்களவரும் எதிர்ப்பர். ஆகவே சமஷ்டி அமைப்பு முறைபற்றிப் பேசுவதில் பயன் ஏதுமில்லை." இவ்வாறு வர்த்தக மற்றும் வணிகத்துறை அமைச்சர் ஏ. ஆர். எம் மன்சூர் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அமைச்சர் மன்சூரின் இக்கூற்று எந்தளவு சிங்கள மக்களின் இன்றைய சிந்தனைகளைப் பிரதிபலிக்கின்றது என்பது இன்று சர்சைக்குரியது. சிங்கள மக்களில் அநேகர் இன்று யுத்தத்தில் சலிப்படைந்துள்ளனர். இது வரையும் இல்லாதது போன்று யுத்தம் வர்க்கபேதம் இன்றி ஒவ்வொரு வரினதும் வாயிற் கதவைத் தட்டத்தொடங்கியுள்ளது. சிறிலங்கா இராணுவத்தினரே வெல்ல முடியாத யுத்தம் ஒன்றில் தாம் பலியாகிக் கொண்டிருக்கின்றோமோ என்ற மனோநிலையில் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு யுத்தம் சிறிலங்காவின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது. இதன்காரணமாக நாட்டில் அபிவிருத்திநடவடிக்கைகள் முடங்கிப்போயுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டமும் அதனைத் தொடர்ந்து உருவாகி வரும் சட்டம் ஒழுங்கு மீறல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. அத்தோடு விலைவாசி ஏற்றத்தினால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது நெருக்கடி தீவிரமாகி வருகின்றது. இவை மக்களை நேரடியாகப் பாதித்துள்ளன.

அத்தோடு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவற்குப் போதிய அளவில் அரசாங்கத்திடம் நிதி இன்றிஅரசு திண்டாடுகிறதுவெளிநாடுகளில்இருந்து பெறப்படும்கடன்களில் இருந்து யுத்தத்தை நடத்த வேண்டியுள்ளது. இவ்வருட ஆரம்பத்திலேயே வருடாந்தம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் 1000 கோடி ருபாவை கடந்துவிட்ட நிலையில்இன்று அத்தொகை மேலும் அதிகரித்திருக்கலாம் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. இதனால் நிலைமை மோசமடையலாம் என சிங்களவர் கருதுகின்றனர்

இதேவேளை வடக்கு -கிழக்கு யுத்த முறையில் போரிட சிங்கள இளைஞர்கள் தயாராகவும்

## மடு அகதிகள் முகாமில் தண்ணீர்ப் பற்றாக்குறை

(வவுனியா)

மடு திருப்பதி அகதிமுகாமில் குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ அறவே தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான அகதி மக்கள் அயல் கிராமங்களை நோக்கித் தண்ணீர் பெறுவதற்காகப் படையெடுக்கின்றனர்.

மேற்படி அகதிமுகாம் கிணறுகளிலோ, குளத்திலோ அறவே தண்ணீர் இல்லை. அகதி முகாம் நிர்வாகத்தினர் ஒரு பவுசரில் தினமும் தண்ணீர் கொண்டு வந்து வழங்குகின்றனர். அது போதாத காரணத்தினால் மக்கள் அயலில் உள்ள கிணறுகளில் நீர் பெற்று வருகின்றனர்.

இருபத்தையாயிரத்திற்கு அதிகமான மக்கள் தங்கியுள்ள இந்த அகதிமுகாமில் ஏற்பட்டுள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு அந்த மக்களுக்கு பெரிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

குளிப்பதற்காகத் தச்சனா மருதமடு குளத்தை நோக்கிச் செல்லும் மக்கள் குடிநீர் பெறுவதற்காக பன்றிவிரிச்சான் போன்ற அயல் கிராமங்களை நோக்கிச் செல்கின்றனர்.

இன்னும் சில நாட்களுக்குள் மழை பெய்யத் தவறும்பட்சத்தில் மற்றைய கிணறுகளிலோ குளங்களிலோ தண்ணீர் அறவே இல்லாது போகும் நிலை ஏற்படலாம் இதன் பின்னர் அகதி மக்கள் அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்படும் என்று கவலை தெரிவிக்கப்பட்டது. (தி)

## வவுனியா எல்லைபுறங்களில் கண்காணிப்பு அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமப் பகுதிகளில் அதிகளவிலான காவல் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிங்களப் பகுதிகளையும் சிங்கள மக்களையும் பாதுகாக்கும் நோக்குடனேயே இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா இராணுவம் பொலிஸ் மற்றும் சிங்கள முஸ்லிம் ஊர்காவல் படையினர் இக்காவல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனராம்.

பாதுகாப்பில்லை என்று காரணம் சொல்லப்பட்டு இடம் பெயர்ந்து தென்புறங்களை நோக்கிச் சென்ற சிங்கள மக்களில் பலர் தற்போது குடியமர்த்தப்பட்டு வருகின்றனராம். (தி)

## தொண்டர் ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேற்று இடம்பெற விருந்த யாழ்ப்பாணம் வேலணைக் கல்விக் கோட்ட நேர் முகத்தேர்வுகள் நாளை 28 ஆம் திகதிக்குப்பிற்போடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு 28 ஆம்திகதி முற்பகல் 11மணிக்கு யாழ்கோட்ட அலுவலகத்திலும், வேலணைக் கோட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு அதேதினம் பிற்பகல் 3 மணிக்கு வேலணைக்கோட்ட அலுவலகத்திலும் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் என்று யாழ் கல்வித் திணைக்கள அறிவிப்பு ஒன்று கூறுகிறது. 43 தொண்டர் ஆசிரியர்கள் வேலணைக்கோட்டத்தில்நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

### எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை

## காணாமற் போனவர்களின் சகோதரருக்கு அச்சுறுத்தல்

எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலயத்தை சேர்ந்த காணாமல் போன 31 உயர்வகுப்பு மாணவர்களின் சகோதரர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டு வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

இம்மாணவர்களின் பெற்றோர்கள் இவ்விடயம் பற்றி கல்வியமைச்சுக்கும், பாதுகாப்[illegible] துள்ளனர்.

31 மாணவர்கள் காணாமல் போன சம்பவத்துடன் தொடர்பானவர் என கருதப்படும் மேற்படி பாடசாலை அதிபரினால், காணாமல் போன மாணவர் ஒருவரின் சகோதரர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார். இதுபற்றிய பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்

## வங்கக் கடலில் ஆயுதக் கப்பல்கள் புலிகளுக்கு ஆயுதம் வழங்க முயற்சி

### - இந்தியத் தூதுவர் ஜா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் கண்காணிப்பையும் மீறி விடுதலைப் புலிகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து ஆயுதங்கள் வருவதாகக் குற்றம் சாட்டப்படுவது முறையல்ல. ஏனெனில் இது மிகவும் கடினமானது ஆனால் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிறிலங்கா கடற்பரப்பை வந்தடைய சில ஆயுதக் கப்பல்கள் முயற்சிக்கின்றன. இவ்வாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நாகேந்திரநாத் ஜா ஐலண்ட் இதழுக்கு உத்தியோக பூர்வமாக எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

பாகிஸ்தான் ஆயுதச் சந்தையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆயுதக் கொள்வனவு செய்வதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது பிரச்சினைகளுக்கு புதிய பரிமாணத்தை உண்டு பண்ணியுள்ளது. இது குறித்து சிறிலங்காவும், சிறிலங்கா அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும். கிட்டு கராச்சியில் காணப்பட்டார் என்று பிரத்தியேகமான செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் கிட்டு வடபகுதியில் காணப்பட்டார் என்றும் அண்மையில் செய்திகள் கூறுகின்றன என்று தெரிவித்தார்.

செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜா, புலிகள் மேற்கொண்டு வரும் யுத்தம் சிறிலங்காவின் பிரச்சினையாகும் அதற்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமில்லை என்றார்.

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் யுத்தம் அடிப்படையாக சிறிலங்காவின் பிரச்சினையாகும். பிரச்சினைக்குத் தீர்வு இராணுவ நடவடிக்கையில் தங்கியுள்ளதா என்பதைச் சிறிலங்கா அரசுதான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இதன் விளைவுகள் சிறிலங்காவின் எல்லைகளுக்கு அப்பால் உணரப்படுவதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும்,

ஐக்கிய சிறிலங்கா அமைப்பினுள் தமிழரின் நியாயபூர்வான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும் 1987 இந்தியா - சிறிலங்கா உடன்பாடும், அதனுடன் சம்பந்தப்பட்டவைவும் இன்றும் செல்லுபடியாகும். இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான ஓர் உண்மையான முயற்சி இதுவாகும்.

இவ்வாறு ஜா மேலும் தெரிவித்தார்,

## சமஷ்டி முறை பேசுவதால் எவ்வித பயனும் ஏற்படாது

### - வர்த்தக அமைச்சர் மன்சூர்

[கொழும்பு]

சமஷ்டி ஆட்சி முறையை இந்நாட்டின் ஒவ்வொரு சிங்களவரும் எதிர்ப்பார்கள் என்றும், அதனால் தமிழ்க்கட்சிகள் சமஷ்டி முறை பற்றிப் பேசுவதால் பயனில்லை என்றும் அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் அவசர கால சட்டத்தினை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர்இவ்விதம் குறிப்பிட்டார்.

## எனது தொகுதி மக்களும் இடம் பெயர்கின்றனர்

### - மைத்திரிபால சேனநாயக்கா

[கொழும்பு]

''வவுனியாவிலிருந்து வரும் புலிகள் எனது தொகுதியில் உள்ள சிங்கள கிராமங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கின்றனர். இதனால் சிங்கள கிராமவாசிகள் இடம் பெயர நேரிட்டுள்ளது. அரசு இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்'' என சிறிலங்காசுதந்திரக் கட்சி எம். பி. மைத்திரிபால சேனநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனர்நிர்மாண சமூகநல அமைச்சின் குறைநிரப்பு பிரேரணைகள் மீது பேசிய அவர் புலிகளின் இந்த அச்சுறுத்தல் சம்பந்தமாக சிறிலங்கா பொலிசாரிடமும், ஜனாதிபதி அலுவலகத்திலும் தாம் முறையிட்டுள்ளதாகவும் கூறினார்.

### இனப்பிரச்சினையில்

## அந்தரங்கசுத்தி இருந்தால் 24மணிநேரத்தில்தீர்வுவரும்

(கொழும்பு)

பெரும்பான்மைக் கட்சிகள் அந்தரங்கசுத்தியுடன் இருந்தால் இனப்பிரச்சினையை இருபத்தி நான்கு மணி நேரத்தினுள் தீர்த்துவிடலாம் என்று ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி குறிப்பிட்டார்.

## ஜெர்மன் நாஸி ஆதரவாளர் இல. தமிழர் மீது தாக்குதல்

### 34 தமிழ் அகதிகள் காயம்

ஜெர்மனியில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள் மீது நாஸி ஆதரவாளர்கள் ஆயுதங்கள், துப்பாக்கிகள் சகிதம் தாக்குவதாக 'இந்து'ப் பத்[illegible]ளது.

இத்தாக்குதலில் ஈழத்தமிழ் அகதிகள் 34 பேர் கடந்த மாதம் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பொலிசாரின் முற்றுகையின் போது ஏழு நாஸி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரி

கள் முடங்கிப்போயுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டமும் அதனைத் தொடர்ந்து உருவாகி வரும் சட்டம் ஒழுங்கு மீறல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. அத்தோடு விலைவாசி ஏற்றத்தினால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது நெருக்கடி தீவிரமாகி வருகின்றது. இவை மக்களை நேரடியாகப் பாதித்துள்ளன.

அத்தோடு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவற்குப் போதிய அளவில் அரசாங்கத்திடம் நிதி இன்றிஅரசு திண்டாடுகிறதுவெளிநாடுகளில்இருந்து பெறப்படும்கடன்களில் இருந்து யுத்தத்தை நடத்த வேண்டியுள்ளது. இவ்வருட ஆரம்பத்திலேயே வருடாந்தம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் 1000 கோடி ரூபாவை கடந்துவிட்ட நிலையில்இன்று அத்தொகை மேலும் அதிகரித்திருக்கலாம் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. இதனால் நிலைமை மோசமடையலாம் என சிங்களவர் கருதுகின்றனர்

இதேவேளை வடக்கு-கிழக்கு யுத்த முனையில் போரிட சிங்கள இளைஞர்கள் தயாராகவும் இல்லை. இதுவரை இராணுவத்திலிருந்து 7000க்கு மேற்பட்டோர் ஓடியுள்ளனர் இதேவேளை இறந்தோ, படுகாயமடைந்தோ 11,500க்கு மேற்பட்டோர் இராணுவ சேவையில் இருந்து விலக வேண்டியுள்ளது இந்நிலையில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்க அரசாங்கம் எடுத்து வரும் பகீரதப் பிரயத்தனம் தோல்வியில் முடிவுற்றது இவ்வாரம் இரண்டாயிரம் பேரை சேர்ப்பதற்கென அரசு முடிவு செய்திருந்த வேளையிலும் 400பேர்மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தனர். அதாவது போரில் ஈடுபட சிங்கள இளைஞர்கள் பின்னடிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, சிங்கள அரசியல்வாதிகளில் சிலர் கூட இப்பிரச்சினை ஏதோ ஒருவழியில் தீர்க்கப்பட்டாக வேண்டும் என எண்ணுகின்றனர் அல்லது சிறிலங்கா என்ற நாடே குட்டிச்சுவராகி விடும் என எண்ணுகின்றனர். இதனைக்கருத்தில் கொண்டு சில அரசியல்வாதிகள் குறிப்பிட்ட அளவில் தமிழரின் உரிமைகளை அங்கீகரிக்கவும் தயாராக இருக்கின்றனர்.

இவ்வாறாக இப் பிரச்சினை ஒழிந்தால்போதும் என சிங்கள மக்களில் கணிசமான அளவினர்எண்ணும் பொழுது, சமஷ்டி அமைப்பு முறைக்குச் சிங்கள மக்கள் முற்றாக எதிராகவுள்ளனர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனக் கூறுவது அமைச்சரின் அபிலாசையே ஒழிய முழுச் சிங்கள மக்களின் அபிலாசைகள் எனக் கூறுவதற்கில்லை அதாவது சிங்கள மக்கள் இனப்பிரச்சினையின் விஸ்பரூபத்தையும். அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் இன்று தெளிவாக உணர்ந்துள்ளனர்.

இந்நிலையில், இன்றும் இனவாதத்தை வைத்து ஆட்சியையும், அதிகாரத்தையும் காப்பாற்றவும் கைப்பற்றவும் நினைக்கும் அரசியல்வாதிகளின் நிலைப்பாடே அமைச்சர் மன்சூரின் நிலைப்பாடாகும் ஆனால், இதனை இதுவரை சிங்கள அரசியல்வாதிகளே பயன்படுத்திவந்தனர். தற்பொழுது முஸ்லிம் அமைச்சர் இது குறித்துப் பேசியதே முக்கியமானதாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள மக்கள் முட்டுக்கட்டையாக உள்ளனர் என்பதைவிட பெருமளவு அரசியல்வாதிகளே தடையாகவுள்ளனர். என்பதே நிதர்சம் அதாவது இனப்பிரச்சினையை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவர்களே இன்று அதனைத் தீர்த்துவைக்கவும் தடையாக உள்ளனர் இப்பிரச்சினை சிறிலங்காவின் ஆட்சி அதிகார மாற்றத்துடன் நெருக்கமாக இருப்பதினால் இலகுவில் தீர்த்துவைக்கக்கூடியதும் அல்ல.

---

...பாணம் வேலணைக் கல்விக் கோட்ட நேர் முகத்தேர்வுகள் நாளை 28 ஆம் திகதிக்குப்பிற் போடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு 28 ஆம்திகதி முற்பகல் 11மணிக்கு யாழ்கோட்ட அலுவலகத்திலும் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் என்று யாழ் கல்வித் திணைக்கள அறிவிப்பு ஒன்று கூறுகிறது. 43 தொண்டர் ஆசிரியர்கள் வேலணைக்கோட்டத்தில்நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

---

எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை

## காணாமற் போனவர்களின் சகோதரருக்கு அச்சுறுத்தல்

எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலயத்தை சேர்ந்த காணாமல் போன 31 உயர்வகுப்பு மாணவர்களின் சகோதரர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டு வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

இம்மாணவர்களின் பெற்றோர்கள் இவ்விடயம் பற்றி கல்வியமைச்சுக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்கும் அறிவித்துள்ளனர்.

31 மாணவர்கள் காணாமல் போன சம்பவத்துடன் தொடர்பானவர் என கருதப்படும் மேற்படி பாடசாலை அதிபரினால், காணாமல்போன மாணவர் ஒருவரின் சகோதரர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார். இதுபற்றிய பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

---

...சினையாகும் அதற்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமில்லை என்றார்.

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் யுத்தம் அடிப்படையாக சிறிலங்காவின் பிரச்சினையாகும். பிரச்சினைக்குத் தீர்வு இராணுவ நடவடிக்கையில் தங்கியுள்ளதா என்பதைச்

---

## அந்தரங்கசுத்தி இருந்தால் 24மணிநேரத்தில்தீர்வுவரும்

(கொழும்பு)

பெரும்பான்மைக் கட்சிகள் அந்தரங்கசுத்தியுடன் இருந்தால் இனப்பிரச்சினையை இருபத்தி நான்கு மணி நேரத்தினுள் தீர்த்துவிடலாம் என்று ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி குறிப்பிட்டார்.

---

# ஜெர்மன் நாஸி ஆதரவாளர் இல. தமிழர் மீது தாக்குதல்

### 34 தமிழ் அகதிகள் காயம்

ஜெர்மனியில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள் மீது நாஸி ஆதரவாளர்கள் ஆயுதங்கள், துப்பாக்கிகள் சகிதம் தாக்குவதாக 'இந்து'ப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஈழத்தமிழ் அகதிகள் 34 பேர் கடந்த மாதம் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர் தாக்குதலைத் தொடர்ந்து பொலிசாரின் முற்றுகையின் போது ஏழு நாஸி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

---

அணுவாயுதத்திட்டத்தை

# பாகிஸ்தான் கைவிடும்வரை ராணுவ, பொருளாதார உதவி இல்லை

### - அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

அணுஆயுத வசதிபெற்ற நாடாக மாறுவதற்கு பாகிஸ்தான் செய்துவரும் முயற்சிகளை உடனே நிறுத்துவதற்கு தெளிவான மற்றும் சந்தேகத்திற்கு இடமற்ற நடவடிக்கைகளைபாகிஸ்தான் மேற்கொள்ளாத வரை அந்நாட்டிற்கான இராணுவ பொருளாதார உதவிகள் வழங்கப்படமாட்டாது. அத்தகைய நிலை ஏற்படும் வரை பாகிஸ்தானுக்கு இராணுவபொருளாதார உதவிகள் வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமெரிக்க நிர்வாகம் திட்டவட்டமாக கூறிவிட்டது.

பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவராக பொறுப்பேற்க இருக்கும் ஜோன் கமெரன் மோர்சே இதுபற்றி நவாப் ஷெரீப்பிடம் எடுத்துக் கூறியுள்ளதாக நேற்றுமுன் தினம் வாஷிங்டனில் தெரிவித்தார்.

அணுஆயுதம் சம்பந்தமான இப்பிரச்சினையைஏற்கக்கூடிய வகையில் சுமுகமாக தீர்ப்பதற்கு ஏற்றவகையில் வாஷிங்டன் இஸ்லாமாபாத்திடம்இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக செனட்டர்களின் வெளியுறவுக் கமிட்டியின் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த மோர்சே இவ் அணு ஆயுத சம்பந்தமாக தீவிரமாக ஆலோசனை நடாத்தியதின் பின்னரே ஒருசிலஆயுதங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

---

## ஐ. நா. வில் வீட்டோ ரத்துச் செய்யப்பட வேண்டும்

### - மலேசிய வெளியுறவு அமைச்சர்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஐந்து வல்லரசுகளின் அதிகாரம் பலமாகவுள்ளது என்று நியூயோர்க் நகரில் நடந்துவரும் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபையில் உரையாற்றிய மலேசிய நாட்டு வெளியுறவு அமைச்சர் யாஜ்வாய் பகிரங்கமாக வல்லரசு நாடுகளைக் கண்டித்துள்ளார்.

ஐரோப்பாவுக்கு ஐ நா வில் அதிக பிரதிநிதித்துவம வழங்கப்பட்டுள்ளதென்றும் 'ரத்து' அதிகாரம்இல்லாமல் செய்யப்படவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

---

சர்வதேச விமான சேவை

## விமானத்திற் புகைபிடித்தல் தடைசெய்ய ஆலோசனை

சர்வதேச விமானச் சேவைகளில் புகைபிடிப்பதைத் தடுக்கச் சர்வதேச விமானப்போக்குவரத்துச் சங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

சர்வதேச விமானச்சேவையில் புகைப் பிடித்தல் தடையைப் படிப்படியாக நடைமுறைப் படுத்துமாறு அவுஸ்ரேலியவும், கனடாவும் கூட்டாகச் சர்வதேச விமானப்போக்குவரத்துச் சங்கத்தில் உறுப்பு நாடுகளான 173 நாடுகளைக் கேட்டுள்ளன. ஜூலை 1,1994 இல் இருந்து புகைப்பிடித்தலை முற்றாகத்தடை செய்யுமாறும் இந்த இரு நாடுகள் கோரியுள்ளன

முன்பே பல சர்வதேச விமானச் சேவைகளில் கனடா புகைத்தலுக்குத் தடை போட்டுள்ளது. ஜூலை1,1993 இல் புகைத்தலுக்குப் பூரண தடை விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் உள்நாட்டு விமானச் சேவைகளில் மாத்திரம் புகைத்தலுக்குத் தடை விதித்துள்ளன. இந்த நாடுகள் தமது வெளிநாட்டுச் சேவைகளில் புகைத்தலை அனுமதித்துள்ளன.

---

தமிழகத்தில் அகதிமுகாமிற்கு

## வெளியிலுள்ளோர் பதிவுக்கு வியாழன் வரை அவகாசம்

(சென்னை)

தமிழ்நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே இருக்கும் இலங்கைத் தமிழர்கள் அவர்களுடைய பெயர்களை காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்வதற்கு எதிர்வரும் வியாழன் வரை கால அவகாசம் அளித்துள்ளது.

இவ்வாறு பதிவு செய்யாதோர் உடனடியாக சிறப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்று தமிழ் நாடு அரசின் தலைமைச் செயலாளர் கூறியுள்ளார்.

---

மணிப்பூர் சபாநாயகரை

## நீதிமன்றில் ஆஜராக உயர்நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

மணிப்பூர் சட்டப் பேரவையின் சபாநாயகரை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மணிப்பூர் சட்டப் பேரவை சபாநாயகரான டாக்டர் போடோபாபு சிங் நீதிமன்றத்தில் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்பாக நேரில் ஆஜராகுவதற்கு இசைவுதெரிவிக்காவிட்டால் அவரை அக்டோபர் இருபதாம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது,

---

இந்திய பாராளு உறுப்பினர்கள்

## ஒழுங்குவிதி பற்றி சபாநாயகர்கள் ஆராய்வு

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்த விதி ஒன்றை உருவாக்குவது பற்றி இந்தியாவில் உள்ள அனைத்து சபாநாயகர்களும் கலந்துகொண்ட மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுள்ளது புதுடில்லியில் நடைபெற்ற மேற்படி மாநாட்டின் முடிவுகள் பற்றி நேற்றுமுன் தினம் செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய லோக சபை சபாநாயகர் சிவராஜ் பாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ஒவ்வொரு அரசியற் கட்சியும் தத்தமது பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறை குறித்த விதிமுறை ஒன்றை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பது ஏகமனதாக ஏற்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

## மன உறுதியுடன் போராடும் வரை புலிகளை அடக்கிவிட முடியாது

**- வே. பாலகுமார்**

(யாழ்ப்பாணம்)

"தளராத மன உறுதியுடன் சொந்தக் காலில் நின்று நாம் போராடும் வரை ஆயுதங்களால் எம்மை அடக்கிவிட முடியாது." இவ்வாறு நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெற்ற தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பிரமுகர் திரு. வே. பாலகுமார் கூறினார்.

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும் தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்கவும் சிறிலங்கா அரசு யுத்த டாங்கிகளையும், விமானங்களையும் மற்றும் ஆயுதங்களையும்வாங்கிக்குவிக்கலாம் ஆனால் இவ் ஆயுதங்களும் விமானங்களும் எமது மன உறுதிக்கு முன்னால் எம்மை எதையும் செய்ய முடியாது.

பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட வடிவங்களையும் பரிமாணங்களையும் பெற்று எமது போராட்டம் வளர்ச்சி அடைந்து வருகிறது உலகில் கட்டுக் கோப்புடனும் உறுதியுடனும் நடைபெற்று வரும் விரல் விட்டு எண்ணக் கூடிய விடுதலைப் போராட்டங்களில் எமது விடுதலைப் போராட்டமும் ஒன்று.

இக்கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசும் போது அன்று அந்நியப்படைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததால் அந்நியப்படைகள் அஞ்சி ஓடின. அதேபோல் இன்றும் சிங்களப் படைக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழவேண்டும். சிங்களப்படை தமிழீழத்தில் இருந்து விரட்டப்பட வேண்டும். இதுவே தியாகி திலீபனுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா பேசும்போது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு ஒப்பற்ற தியாகம் புரிந்த தியாகி திலீபன் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் சிறந்த வடிவம் கொடுத்தவர். எமது போராட்ட வாழ்க்கைத் தத்துவங்களைக் கற்றுத் தந்தவர். தியாகி திலீபனின் கனவுகளை நாம் அனைவரும் மனதில் ஆழப்பதித்து திலீபனின் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து சென்று எமது தாயகத்தை வென்றெடுப்போம் என்றார்.

கவிஞர் மு வே யோ. வாஞ்சிநாதன் பேசும்போது 1987-ம் ஆண்டு தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த பன்னிரண்டு நாட்களின் நிகழ்வுகளையும் மீண்டும் ஞாபகமூட்டி ஒவ்வொரு சம்பவங்களையும் மக்களின் மனக்கண் முன்னால் நிறுத்தி மக்கள் அனைவரதும் உணர்வுகளைத் தொடும்வகையில் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம், கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (க) (பா) (ச)

## விமான

ர்தி ஒன்றும் யாழ். குடாக் கடல் மற்றும் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது. இது இவ்வாறிருக்க அவ்ரோ விமானங்கள் பல தடவைகள் பலாலி முகாமிற்குச் சென்று திரும்பியதையும் காணக்கூடியதாக இருந்தது, (பா)


உலக பல்கலைக்கழக சேவை
யாழ் கிளையின் நிதிக்காக

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட
மாணவர் நடிக்கும்

## 2 வேங்கைகள் வீரச்சாவு



லெப். கலையின்பன்



## கூட்டம்

(வேலணை)

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் கூட்டமொன்று அதன் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் இன்றுயாழ்பருத்தித்துறை வீதியில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற விருக்கின்றது. (14)

## ஐ.நா. சபையில் நிரந்தர உறுப்புரிமை இந்தியா கோருகிறது

(நியூயோர்க்)

ஐ நா. பாதுகாப்புச்சபை விரிவுபடுத்தப்படும்போது தனக்கு நிரந்தர உறுப்பினர் உரிமை தரப்படவேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா முறைப்படியாக எழுப்பியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் ஐ நா. பேரவையில் உரையாற்றிய இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெலய்ரோ இந்தியாவின் நிலைப்பாட்டை வலியுறுத்திப் பேசினார்.

பொருளாதாரத் தகுதியோடு ஏற்புடைய பிற விடயங்களையும் கவனத்திற்கொண்டு ஐ. நா. பாதுகாப்புச் சபை விரிவுபடுத்தப்படவேண்டும் என்று அவர் கோரினார்.

ஜப்பானும், ஜேர்மனியும் தமது பொருளாதாரப் பலத்தைக் காரணம்காட்டி ஐ. நா. பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்புரிமை கோரியிருப்பது தெரிந்ததே.

## பாட்டாளி மக்கள் கட்சி பிரமுகர் சென்னையில் கைது

(சென்னை)

இந்திய நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கிய பிரமுகருமான நெல்லிக்குப்பம் திரு கிருஷ்ணமூர்த்தி நேற்று சென்னையில் கைது செய்யப்பட்டார்.

இவருடன்மேலும்ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

தேசவிரோத மற்றும் சட்டவிரோத செயல்களில் அவர் ஈடுபட்டிருந்ததாகப் பொலிசார் அவர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

## மாதகல், இளவாலையில் மருத்துவவசதியின்றி அவதி

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலைப் பகுதிகளில் மருத்துவ வசதியின்றி சுமார் இருபது நோயாளர்கள் அவதியுறுகின்றனர்.

இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள மேற்படி பகுதிகளில் சுமார் 500 பொது மக்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கியிருப்பதாகவும் மேற்படி பகுதிகளில் இராணுவத் தாக்குதல்களால் பொது மக்களின் பல உடமைகள் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும், பல பெறுமதி மிக்க பொருள்கள் படையினரால் சூறையாடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (க)

## யாழ். மாவட்டபாடசாலைகளுக்கு இடையேயான கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டதில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றைய போட்டிகளின் விபரம் வருமாறு:

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு 17 வயது ஏ - பிரிவில் ஊரெழு கணேசாவித்தியாசாலை எதிர் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம். மாலை 4.10 மணக்கு 19 வயது பிரிவில் உரும்பராய் இர்துக்கல்லூரி எதிர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்.

உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு 17 வயதுப் பிரிவில் உரும்பராய் இந்துக்கல்லூரி எதிர் இணுவில் சைவமகாஜனா. மாலை 4.10 மணிக்கு 17 வயது ஏ - பிரிவில் தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் ஸ்கந்தவரோதய கல்லூரி.

வடமராட்சி கல்விக்கோட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3 00 மணிக்கு மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை எதிர் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. மாலை 4.15 மணிக்கு 19 வயது பிரிவில் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி எதிர் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்.

## திலீபன் நினைவு நாளில் வகுப்பறைகள் திறப்பு

1200 மாணவர்களை கொண்ட இடைக்காடு மகா வித்தியாலயம் கடந்த டிசம்பரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது நீர்வேலி அத்தியார் இந்துக்

களை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இத் தற்காலிக கொட்டகைகள் தியாகி திலீபனின் தியாகத் தினமான நேற்று பாட

## லெப். கேணல் சுபனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் சுபன், லெப். தமிழேஸ்வரன், 2 ஆம் லெப். சுருளி ஆகிய வீரவேங்கைகளுக்கு நேற்று நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள், போராளிகள், தமிழீழ காவல்துறையினர் ஆகியோர் அணிதிரண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நேற்று 12 00 மணியளவில் இம்மூன்று வேங்கைகளினதும் புகழுடல்கள் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு அலங்கார ஊர்தியில் எடுத்து வரப்பட்டு அங்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டது இவர்களுக்கு பெருந்திரலான மக்கள் தொடர்ச்சியாக அஞ்சலி செலுத்தியவண்ணமிருந்தனர்.

இதற்கிடையில்போராளிகளும் தமிழீழ காவல்துறையினரும் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். தொடர்ந்து 12 45 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அஞ்சலிக்கு வைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை குருநகர், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலும் லெப்டினன்ட் கேணல் சுபனின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் மன்னார் மக்களின் அஞ்சலிக்காக நேற்று பிற்பகல் மனனாருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (பா)

## புகையிரதத் திணைக்களம் நட்டத்தில் இயங்குகிறது

சிறிலங்கா அரசின் புகையிரதத் திணைக்களம் பாரிய நட்டத்தில் இயங்கி வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும் வருமானம் ஈட்டித்தந்த வடபகுதிக்கான புகையிரதசேவை நடைபெறாமைஉட்பட தென்னிலங்கையில் பாரிய செலவில் அமைக்கப்பட்ட புகையிரதவீதிகள் உபயோகிக்கப்படாமையும். இதற்கான காரணங்கள் எனக் கூறப்படுகின்றன.

## பூநகரி

களை நடத்திவருகின்றன.

இதனால் மேற்படி பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்கள் பல பலத்த சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்படி பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர் என்பது தெரிந்ததே.

## வீர அஞ்சலி
## லெப். கலையின்பன்
[சிவஸ்ரீ தியாகராஜா-இராமையா]

நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதம குரு காலம் சென்ற சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் இராசலட்சுமி தம்பதிகளின் இளையபுத்திரன் இராமையா (லெப். கலையின்பன்) அவர்கள் 26-09-92 சனிக்கிழமை அதிகாலை பூநகரியில் சிறிலங்கா இராணுவத்தினருடன்

வளர்ச்சி அடைந்து வருகிறது உலகில் கட்டுக்கோப்புடனும் உறுதியுடனும் நடை

விமான

ர்தி ஒன்றும் யாழ். குடாக் கடல் மற்றும் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது. இது இவ்வாறிருக்க அவ்ரோ விமானங்கள் பல தடவைகள் பலாலி முகாமிற்குச் சென்று திரும்பியதையும் காணக்கூடியதாக இருந்தது, (பா)

தியாகி திலீபனின் கனவுகளை நாம் அனைவரும் மனதில் ஆழப்பதித்து திலீபனின் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து சென்று எமது தாயகத்தை வென்றெடுப்போம் என்றார்.

கவிஞர் மு வே யோ.வாஞ்சிநாதன் பேசும்போது 1987-ம் ஆண்டு தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த பன்னிரண்டு நாட்களின் நிகழ்வுகளையும் மீண்டும் ஞாபகமூட்டி ஒவ்வொரு சம்பவங்களையும் மக்களின் மனக்கண் முன்னால்


உலக பல்கலைக்கழக சேவை
யாழ் கிளையின் நிதிக்காக

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட
மாணவர் நடிக்கும்

**'அன்னை இட்ட தீ'**


நாடகம்

இன்று மாலை 4 மணிக்கு
யாழ். பல்கலைக்கழக கைலாசபதி
கலையரங்கில் நடைபெறும்.

நுழைவுச் சீட்டுகள்: 50 - 20 -

கிடைக்குமிடங்கள்: அபிராமி விலாஸ் (பல்கலைக்கழக பிரதான வாயில் முன்பாக), கலையரங்க வாயில் (3283)


## வீரச்சாவு



| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 05 | 19 |
| – | – |
| 01 | 09 |
| – | – |
| 1968 | 1992 |

## லெப்டினன்ட் வேலன்

19-09-1992 அன்று வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் லெப்டினன்ட் வேலன் (கிறீஸ், வீணுகோபால் கிருஷ்ண குமார், புலோலி தெற்கு, புலோலி) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– நண்பர்கள்

(சி/5123)

லெப்.கலையின்பன்



லெப்.முதுவழுதி

பூநகரி ஆலடியில் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் இரண்டு வீரவேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் கலையின்பன் (தியாகராஜா குருக்கள் ராமையா நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறை) லெப்டினன்ட் முதுவழுதி (ஆறுமுகம் கோணேஸ்வரன் கோவில் புளியங்குளம் வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### திலீபனின்

நல்லூர் ஆலய வீதிகள் அனைத்தும் பலவர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. நல்லூர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையின் ஒருபுறம் தியாகி திலீபன் மக்களுக்கு உரையாற்றும் பத்து அடி உயரமான உருவப்படமும் மறுபுறத்தில் தியாகி திலீபன் உண்ணாநோன்பை ஆரம்பித்து மக்களை நோக்கியவாறு அசனத்தில் அமர்ந்திருக்கும் உருவப்படமும் வைக்கப்பட்டிருந்தது. சூழவுள்ளபகுதிகளில் பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

இதேவேளை தியாகி திலீபன் ஞாபகார்த்த ஸ்தூபி மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டு தியாகி திலீபனின் பிரமாண்டமான உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. பல வர்ண விளக்குகள் மாறிமாறி ஒளி வீசிக்கொண்டிருந்தன. இக்காட்சியினை பெருமளவு மக்கள் நள்ளிரவுவரை சுற்றி நின்று பார்வையிட்ட வண்ணமிருந்தனர். நேற்றைய தினம் ஆறுகாலமும், நாவலடி வைரவர் ஆலய சர்மாக்கர்த்தா சபையினர் 'மானிப்பாய் வீதியில் வைத்து பலமணி நேரமாக குளிர்பானம் வழங்கினர்.

மாலை 3.00 மணிக்கு 17 வயது ஏ - பிரிவில் ஊரெழு கணேசாவித்தியாசாலை எதிர் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம். மாலை 4. 10 மணிக்கு 19 வயது பிரிவில் உரும்பராய் இந்துக்கல்லூரி எதிர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்.

உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3. 00 மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3 00 மணிக்கு மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை எதிர் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. மாலை 4. 15 மணிக்கு 19 வயது பிரிவில் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி எதிர் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்.

# திலீபன் நினைவு நாளில் வகுப்பறைகள் திறப்பு

1200 மாணவர்களை கொண்ட இடைக்காடு மகா வித்தியாலயம் கடந்த டிசம்பரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இயங்கி வருகிறது.

இவ்வாறு இயங்கும் இப் பாடசாலையில் இடப்பற்றாக் குறைகாரணமாக சிரமப் பட்ட மாணவர்களுக்கு கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு குறுகிய நாட்களுள் தற்காலிக கொட்டகைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இத் தற்காலிக கொட்டகைகள் தியாகி திலீபனின் தியாகத் தினமான நேற்று பாடசாலை அதிபர் திருமதி வி. தெய்வேந்திரம் அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப் பட்டன. இத் திறப்பு விழாவிற்கு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கோட்ட

உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ள வந்த பொது மக்கள் மற்றும் போராளிகளின் மௌன அஞ்சலியுடன் உண்ணா நோன்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தியாகி திலீபன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பத்துமணி நாற்பத்து எட்டு நிமிடத்திற்கு அனைவரும் எழுந்து நின்று மௌனஞ்சலி தெரிவிக்க தியாகி திலீபனின் பெரிய உருவப்படங்களுக்கு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர். மாணவர் அமைப்பினர் பான்ட் வாத்திய இசை வழங்கினர். ஆலயங்களில் மணிகள் ஒலித்தன.

இதனையடுத்து விசேட மேடையிலிருந்து தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக கவிதை அஞ்சலிகள் செலுத்தப்பட்டது. இக் கவிதாஞ்சலி நிகழ்ச்சியில் பல்வேறு இடங்களிலுமிருந்து வந்த பொது மக்களில் பாலர்கள் முதல் முதியோர் வரை பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டு கவிதைகள் வாசித்தனர்

நண்பகல் 12.11 மணியளவில் தீவகக் கோட்டத்தினரின் ஏற்பாட்டின் கீழ் தமிழீழ தேசியக் கொடியை கைகளில் தாங்கிய வண்ணம் பறவைக் காவடியாக வந்த ஊர்தியொன்றுநல்லூர்கந்தன் ஆலய உண்ணாவிரத மைதானத்தைவந்தடைந்தது. மங்களவாத்திய இசைமுழங்க, நான்கு சிறுவர்களின் காவடி ஆட்டத்தைத் தொடர்ந்து வந்த பறவைக் காவடி ஊர்தியை அடுத்து, தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய அழகிய தேரொன்றும் பவனி வந்தது. இப்பறவைக் காவடியில் வந்தவர் தியாகி திலீபனின்உருவப்படத்திற்கு காவடியில் இருந்தவாறே மாலை அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தினார்.

தென்மராட்சி பகுதியில் பறவைக்காவடி, பட ஊர்திகள் என்பன பிரதானவீதிகள் வழியாக சென்று உண்ணாவிரத மைதானத்தை அடைந்தன.

வடமராட்சிப் பிரிவில் அல்வாய், கரணவாய் வடக்கு அச்சுவேலி பகுதிகளிலிருந்து திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திகள் பிரதான வீதிகள் வழியாகச் சென்று கூட்ட மைதானத்தை அடைந்தன.

மாலை 4 மணிக்கு நல்லூரில் உண்ணா நோன்பை அனுஷ்டித்துக் கொண்டிருந்த அனைவருக்கும் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் குளிர்பானம் வழங்கி தியாகி திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவு இறுதி நாள் உண்ணா விரத நிகழ்வினை சம்பிரதாய பூர்வமாக முடித்து வைத்தார்.

மாலை 4-30 மணிக்கு பொதுக் கூட்டங்கள் ஆரம்பமாகின இக் கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்

பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ச,க,பா,82)

பூநகரி

களை நடத்திவருகின்றன.

இதனால் மேற்படி பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்கள் பல பலத்த சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்படி பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர் என்பது தெரிந்ததே.

பெரும் வருமானம் ஈட்டித் தந்த வடபகுதிக்கான புகையிரதசேவை நடைபெறாமைஉட்பட தென்னிலங்கையில் பாரிய செலவில் அமைக்கப்பட்ட புகையிரதவீதிகள் உபயோகிக் கப்படாமையும் இதற்கான காரணங்கள் எனக் கூறப்படுகின்றன.


## வீர அஞ்சலி
## லெப். கலையின்பன்
### [சிவஸ்ரீ தியாகராஜா-இராமையா]

நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதம குரு காலம் சென்ற சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் இராசலட்சுமி தம்பதிகளின் இளையபுத்திரன் இராமையா (லெப். கலையின்பன்) அவர்கள் 26- 09- 92 சனிக்கிழமை அதிகாலை பூநகரியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடிமோதலில் வீரசொர்க்கம் அடைந்து விட்டார்.

அன்னார் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் தமிழ், இந்து நாகரிக ஆசிரியருமான சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், விஜயலட்சுமி, வேதையா (ஜேர்மன்), வியோமசேகர் [கறகோவளம் முத்துமாரி தேவஸ்தான அர்ச்சகர்], அமிர்தகடேசர் [கரவெட்டிகிழக்கு தல்லையப்புலம் பத்திரகாளி பிரதம அர்ச்சகர்] ஆகியோரின் அன்புத் தம்பியும், வாலட்சுமி, [கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரிமாணவி]யின் அன்பு அண்ணாவும், புவனேஸ்வரி, றகு, ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோமசுந்தரம்[அதிபர் தையிட்டி வித்தியாலயம்] அகிலாண்டேஸ்வரி ஆகியோரின பெறாமகனும், அன்பழன் [வீரவேங்கை ராசிக்], தமிழழகன் [நீலகண்ணன் றோனி], அறிவழகன் [அன்பரசன்], ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரது பூதவுடல் வீர அஞ்சலிக்காக அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 00 மணியளவில் நெல்லண்டை சனசமூக நிலையம், தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வடமராட்சி மாவீரர் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலட்சுமணன் தோட்டம்
தும்பளை

தகவல்
க.சோமசுந்தரம் (அதிபர்
பருத்தித்துறை சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக்குருக்களும் சகோதரரும் (3284)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 26-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5860

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

41-6933, 42-970, 26-6842, 26-5493, 24-5496, 41-8629, 41-9556, 26-1602, 27-6431, 26-4323 42-3419, 42-1320, 24-7225, 24-6437, 24-336, 24-4560, 28-6640, 22-3379, 37-778, 36-6354, 25-3948, 36-7144, 36-9350

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

22-9127, 24-4992, 24-9825, 42-0761, 26-3582, 41-6893, 24-5774, 24-2161, 42-2432, 24-9676, 42-7312, 26-535, 28-4381, 28-7363, 26-5071, 24-5958, 27-9661, 24-4885, 27-8575, 42-1494, 42-0773


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.